# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# ஆண்டிறுதிப் பரீட்சை 2019

**ஆண்டு: 8** **திகதி: 23/11/2019**

**நேரம்: 2 மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்: திருமதி மாலினி சோமாஸ்கந்தன்**

**மாணவர் பெயர்:** ______________________________

| வினாக்கள் | புள்ளிகள் |
|---|---|
| வினா 1 | |
| வினா 2 | |
| வினா 3 | |
| வினா 4 | |
| வினா 5 | |
| வினா 6 | |
| வினா 7 | |
| மொத்தப் புள்ளிகள் | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**கீழே தரப்பட்ட பகுதியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு முழு வசனங்களில் விடை எழுதுக.**

அரிசியும் கோதுமையும் மக்களுக்குத் தேவைப்படும் முக்கிய உணவுப் பொருள்களாகும். இத்தானியங்கள் உலகின் பல பகுதிகளில் மிகுதியாக விளைகின்றன. இலங்கை, இந்தியா, பர்மா, சீனா முதலிய நாடுகளில் நெல் அதிகமாகப் பயிராகின்றது. அமெரிக்காவிலும் சோவியத் யூனியனிலும் கோதுமை பெருமளவில் விளைகிறது.

நெல் பயிராவதற்கு ஈரமான நிலமும் வெப்பமான பருவநிலையும் தேவை. இந்தியா முழுவதும் வேளாண்மை நடைபெறுகிறது. ஆனால் வங்காளத்தில் விளையும் ஒருவகை நெல் தனித்தன்மை உடையதாகும். சிவப்பு வண்ணமும் இனிப்புச் சுவையும் உடையது இந்த வகைஅரிசி. அதுவே இந்தியாவில் விளையும் மிகச்சிறந்த நெல் என்று கருதப்படுகின்றது. பட்னா என்னும் இடத்தில்விளையும் நெல்லிலிருந்து கிடைக்கும் அரிசி வெள்ளை நிறமாய் இருக்கும். இதனை ஐரோப்பியர்கள் விரும்பி உண்கின்றனர்.

கோதுமை உலர்ந்த மண்தரையில் வளருகிறது. ஆனால் அதற்குக் குளிர்ந்த பருவ நிலை தேவைப்படுகிறது. அதிக அளவில் மழை பெய்வது கோதுமைக்குக் கேடு விளைவிக்கும். கோதுமையை அரிசியைப்போல் பெரும்பாலும் சமைத்து உண்பதில்லை. அதை மாவாக்கி ரொட்டி செய்கிறார்கள். அதைக் கொண்டு வேறு சில பலகாரங்கள் செய்கிறார்கள். உலகில் பெரும்பாலான மக்கள் கோதுமை உணவை உட்கொள்கிறார்கள். அதனால்தான் மனித வாழ்க்கைக்கு “ஊன்றுகோல்” என்று சிறப்பிக்கப்படுகிறது. அதுவே ஐரோப்பியர்கள் விரும்பி உண்ணும் உணவாகும். கோதுமை அமெரிக்காவில் இருந்தும் சோவியத் யூனியனிலிருந்தும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

1. நெல் அதிகமாக விளையும் நாடுகள் எவை?

_______________________________________________

_______________________________________________

2. வங்காளத்தில் பயிராகும் ஒருவகை நெல்லின் சிறப்பு என்ன?

_______________________________________________

_______________________________________________

3. கோதுமைக்குத் தீமையாக அமைவது எது?

__________________________________________________

__________________________________________________

4. கோதுமையை மக்கள் எவ்வாறு உண்கிறார்கள்?

__________________________________________________

__________________________________________________

5. கோதுமை மனித வாழ்க்கைக்கு "ஊன்றுகோல்" என்று ஏன்அழைக்கப்படுகிறது?

__________________________________________________

__________________________________________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **2** | **புள்ளிகள்** | **5** | **பக்கம்** | **3** |

**தரப்பட்ட பொருத்தமான இரட்டைச் சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

திடுதிடு குளுகுளு கமகம கலீர்கலீர் சலசல

1. ________________ என நடனமாதுவின் சலங்கை ஒலித்தது.

2. அருவியிலிருந்து நீர் ________________ என பாய்ந்தது.

3. ________________ என மல்லிகைப்பூ மணம் வீசியது.

4. காவலனைக் கண்ட திருடன் ________________ என ஓடி ஒளித்தான்.

5. ________________ எனத் தென்றல் காற்று வீசியது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | 3 | **புள்ளிகள்** | 10 | **பக்கம்** | 4 |

**பின்வரும் இரண்டு தனி வாக்கியங்களை சேர்த்து தொடர் வாக்கியமாக எழுதுக.**

1. வீமன் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தான்.
   அப்போது தீயணைப்பு வண்டியின் ஒலி கேட்டது.

   ______________________________________________

   ______________________________________________

2. மதியின் தாயார் ஓர் அழகான ஓவியத்தை வாங்கினார்.
   அவர் அதை சுவரில் தொங்கவிட்டார்.

   ______________________________________________

   ______________________________________________

3. அப்பா வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.
   அப்போது அவர் ஒரு பணப் பையைக் கண்டார்.

   ______________________________________________

   ______________________________________________

4. சிறுமி பட்டுச் சட்டையை கடையில் பார்த்தாள்.
   அவள் அதை வாங்க விரும்பினாள்.

   ______________________________________________

   ______________________________________________

5. மாணவன் நூல்நிலையத்திற்குச் சென்றான்.
   அவன் ஒரு புத்தகத்தை எடுத்துப் படித்தான்.

   ______________________________________________

   ______________________________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 20 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**கீழே தரப்பட்டுள்ள சொற்களைப் பாவித்து 5 சொற்களுக்குக் குறையாமல் வசனம் அமைக்குக.**

1. பாடசாலை

2. கலைவிழா

3. வகுப்பறை

4. நூல்நிலையம்

5. மாணவர்கள்

6. புகையிரதம்

7. புத்தகம்

8. தமிழ்க் கல்வி நிலையம்

9. கூட்டமாக

10. சுற்றுச் சூழல்

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**(i) தமிழ்க் கலாச்சார நிகழ்வுகள் சிட்னியில் நடைபெறுவதால் மாணவர்களாகிய நீங்கள் அடையும் பயன்கள் மூன்று கூறுக.**

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**(ii) எமது கல்வி நிலையத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட நூலகத்தால் உங்களுக்குக் கிடைக்கவிருக்கும் பயன்கள் யாவை?**

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 6 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |

தமிழ்ப் பாடசாலையில் அல்லது சிட்னியில் அண்மையில் நடைபெற்ற ஒரு நிகழ்வு பற்றி உமது நண்பருக்கு 70 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் ஒன்று எழுதுக.

| வினா இல | 7 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தலைப்பில் 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

1. சுற்றுச் சூழல் காத்திடுவோம்
2. நீர் பார்த்து மகிழ்ந்த திரைப்படம் ஒன்றைப் பற்றி எழுதுக
3. நீர் வாசித்து மகிழ்ந்த புத்தகம் ஒன்றைப் பற்றி எழுதுக